ஒன்று. அது தனியாகப் பரிசீலிக்கப்படும் என்று தான் குறிப்பிட்டிருக்கின்றேன். இப்போது இருக்கின்ற நிலைமைகளில், 2—10—70-ல் வழங்கப்பட்ட திருத்திய விகிதம் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வழியில்லை. அதைத் தனியாகத் தான் பரிசீலிக்கவேண்டும்.

Financial Assistance to the State Institute of Education

* 325 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the financial assistance offered to the State Institute of Education during 1971–72?

மாநில அரசுக் கல்வி நிறுவனத்துக்கு நிதியுதவி

திரு. எம். ராஜா அய்யர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மாநில அரசுக் கல்வி நிறுவனத்துக்கு 1971-72-ல் எவ்வளவு நிதியுதவி வழங்க முன் வரப்பட்டது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து இருநூற்று பத்து ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

Students of the Madras University Colleges

* 326 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the number of students in the Madras University Colleges is unwieldy from the point of view of examination; and

(*b*) if so, whether there is any proposal to start another University in our State?

சென்னைப் பல்கலைக் கழக கல்லூரிகளின் மாணவர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேர்வுகளைப் பொறுத்த வரையில் கருதிப் பார்த்தால், சென்னைப் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளில் மாணவர்கள் அளவுக்கு அதிகமாக உள்ளனர் என்பது உண்மையா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS